

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், திருமானூர் ஊராட்சியில், ஊராட்சிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமினை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு அரசுத் துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா மற்றும் பலர் உள்ளனர்.



சேலத்தில் தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு தந்தையார் ஆசிரியர் வெங்கடாஜலம் அவர்கள் வயது மூப்பின் காரணத்தால் ஜங்ஷன் சுப்பிரமணிய நகரில் உள்ள இல்லத்தில் மறைவெய்தினார். அன்னாரின் திருவுடலுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன், சேலம் மத்திய மாவட்டச் செயலாளர், அமைச்சர் இரா.இராஜேந்திரன், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.




திருப்பூர் மாநகராட்சி, ஜெய்வாபாய் நகரவை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 12ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றுச் செல்லும் மாணவர்களுக்கு உயர்கல்விக்கு வழிகாட்டும் “கல்லூரி கனவு” நிகழ்ச்சியில் வழிகாட்டி கையேடுகளை மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மீ.உதயகுமார், திருப்பூர் தெற்கு மாநகரச் செயலாளர் டி.கே.டி. மு.நாகராசன், மாநகராட்சி கல்விக்குழுத் தலைவர் பெ.திவாகரன் உள்பட துறை சார்ந்த வல்லுநர்கள் மற்றும் கல்வியாளர்கள் உள்ளனர்.

# திருவாரூரில் பால்வளத்துறை அமைச்சர் மனோதங்கராஜ் ஆய்வு!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா – பூண்டி கே.கலைவாணன் பங்கேற்பு!

திருவாரூர், மே 16 -

திருவாரூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் பால்வளத்துறை மற்றும் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் இணைந்து நடத்தும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க செயலாளர்கள் மற்றும் இணை துறை அலுவலர்களுடனான கலந்தாய்வுக்கூட்டம் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது.

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாரிமுத்து, எம்.எல்.ஏ., வை.செல்வராஜ் எம்.பி., மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பால்வளத்துறையின் மூலம் பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்பட்டு வருகிறது. திருவாரூர் மாவட்டத்தில் 57 பால் உற்பத்தி சங்கங்கள் உள்ளது. அதை அதிகபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ஆட்சியில் இதுவரை விவசாய பெருங்குடி மக்களுக்கு 1000 கோடிக்கு மேல் கடன் வழங்கப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் 57 சங்கங்கள் மூலம் 8331 உறுப்பினர்களை கொண்டு நாளொன்றுக்கு சராசரியாக 44875 லிட்டர் பால் கொள்முதல் செய்து 20995 லிட்டர் உள்ளூர் விற்பனை செய்தது போக, தஞ்சாவூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு 23880 லிட்டர் பால் அனுப்பபட்டு வருகிறது. 18.12.2023 முதல் நாளது தேதி வரை லிட்டர் ஒன்றுக்கு ரூ.3/ ஊக்கத் தொகைக்காக 8331 உறுப்பினர்களுக்கு ரூ.3 கோடியே 64 இலட்சத்து 84 ஆயிரத்து 774 தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் நவம்பர் 2024 முதல் சங்க உறுப்பினர்களின் வங்கி கணக்கில் 47 சங்கங்களுக்கு ரூ.1 கோடியே 59 இலட்சத்து 06 ஆயிரத்து 283 ஒன்றியத்தால் நேரடியாக வழங்கப்பட்டுள்ளது.

01.04.2024 முதல் நாளது தேதி வரை கறவைமாட்டு கடன் ரூ.248.48 இலட்சம் அளவில் 381 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 01.04.2024 முதல் நாளது தேதி வரை முஉஉஉ கறவைமாட்டு பராமரிப்புக் கடன் ரூ.351.4 இலட்சம் அளவில் 1681 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தாண்டு பால் உற்பத்தியை பெருக்க கால் நடை வளர்ப்பதற்கு மிகுதியான நபர்களுக்கு கறவை மாட்டு கடன் வழங்க முனைப்பு மேற்கொண்டுள்ளோம். இதை பயன்படுத்திக்கொண்டு விவசாய பெருங்குடி மக்கள் பால் உற்பத்தியை பெருக்க முன் வரவேண்டும்.

சங்கங்களில் தரத்தின் அடிப்படையில் பால் கொள்முதல் செய்ய ஏதுவாக 29 சங்கங்களுக்கு பால் பரிசோதனை கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக 23 சங்கங்களுக்கு பால் பரிசோதனை கருவிகள் இன்று வழங்கப்பட்டுள்ளது. 2023 2024 ஆம் ஆண்டு இறுதிதணிக்கை அறிக்கையின்படி 6840 சங்க உறுப்பினர்களுக்கு கூடுதல் கொள்முதல் விலையாக ரூ.59,51,356.19/ வழங்கப்பட்டுள்ளது. வளமிகு வட்டார வளர்ச்சி திட்டத்தின்கீழ் திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் 6 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு ரூ.9.90 இலட்சம் செலவில் சங்கங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான கணினி, பால் பரிசோதனைக்கருவி, பதிவேடுகள் மற்றும் பால்கேன்கள் உள்ளிட்ட பால் கொள்முதல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது என பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் தெரிவித்தார்.

தொடர்ந்து, திருவாரூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் பால்வளத்துறை மற்றும் தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் சார்பாக ரூ.1.65 இலட்சம் மதிப்பிலான பால் உற்பத்தி பால் பரிசோதனைக்கருவி, பதிவேடுகள் மற்றும் பால்கேன்கள் உள்ளிட்ட பால் கொள்முதல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

முன்னதாக, திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வட்டம் கொரடாச்சேரி ஒன்றியம் காமராஜர் சாலையில் புதியதாக தொடங்க உள்ள ட்டி.வி.ஆர்.(டி) 470 கொரடாச்சேரி கலைஞர் ஆவின் விற்பனை நிலையம், கலைஞர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் மற்றும் பயனாளிகளுக்கு கறவை மாடுகள் வழங்கும் விழாவினை பால்வளத் துறை அமைச்சர்த.மனோ தங்கராஜ் மற்றும் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி. ஆர்.பி.ராஜா ஆகியோர் தொடங்கி வைத்தார்கள்.

பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித்தலைவர் மோகனச்சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்நிகழ்வில் அவைத் தலைவர் க.தன்ராஜ், நகர் மன்ற தலைவர் மன்னைத. சோழராஜன், நகர செயலாளர் வீரா.கணேசன் , ஒன்றிய செயலாளர்கள் ஆர். பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், புலிவலம் ஏ.தேவா, டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேறி சிவா, நா.கவியரசு, கே.வி.கே. ஆனந்த், நகரக் கழகச் செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் பேரூர்க் கழகச் செயலாளர் பூண்டி.கே.கலைவேந்தன், மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.




தருமபுரி மேற்கு மாவட்டம், மாரண்டஅள்ளி அடுத்த கொலசன அள்ளி ஊராட்சி, வேப்பிலை அள்ளி கிராமத்தில் மாவட்டச் செயலாளர் பி.பழனியப்பன் ஆலோசனையின்படி மேற்கு ஒன்றியச்செயலாளர் பஞ்சப்பள்ளி அன்பழகன் தலைமையில் தமிழக அரசின் 4ம் ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் ஜெயவேல் கலந்துகொண்டு கழக ஆட்சியின் சிறப்புகள் குறித்து பேசினார். உடன் தொகுதி பார்வையாளர் டி.எம்.அரியப்பன், ஒன்றியச் செயலாளர் எம்.வீ.டி.கோபால், மாவட்ட தொண்டர் அணி தலைவர் குமார், ஒன்றிய துணை செயலாளர்கள் பி.எல். ரவி, சரிதாகுமார், அண்ணாமலை, துரை, வெங்கடேசன், முருகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### காஷ்மீர், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து

# இதுவரை 226 மாணவ - மாணவிகள் தாயகம் திரும்பி உள்ளனர்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேட்டி!

திருவள்ளூர், மே 16 -

இந்தியா-பாகிஸ்தான் இடையே நடந்த போரை தொடர்ந்து ஜம்மு - காஷ்மீர், பஞ்சாப் மாநிலங்களில் பதற்றமான சூழல் நிலவியது. இதனால் அங்கு வேளாண்மை, தோட்டக்கலை, மீன்வளம், பட்டு வளர்ப்பு, ஆடை வடிவமைப்பு, தேசிய தொழில் நுட்ப கழகம் உள்ளிட்ட உயர் கல்வி பயிலும் தமிழ் நாட்டை சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட மாணவர்கள், தமிழ்நாடு திரும்ப இயலாமல் அவதிப்பட்டனர். அவர்களை மீட்டு வர தமிழ் நாடு அரசுக்கு வந்த கோரிக்கையை தொடர்ந்து

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி அமைச்சர் சா.மு.நாசர், ஒன்றிய அரசு மற்றும் ஜம்மு - காஷ்மீர், பஞ்சாப் மாநில நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இதைத் தொடர்ந்து அவர்களை விமானம் மற்றும் ரயில் மூலம் அழைத்து வர ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் படி மே 13 மற்றும் மே 14ஆம் தேதி மாணவர்கள் போர்க்கால அடிப்படையில் ரயில் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் வந்தனர். அவர்களை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும்



வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வரவேற்று தமிழ்நாடு அரசு சார்பில் ஏற்பாடு செய்துள்ள சிறப்பு வாகனம் மூலம் மாணவ மாணவிகள் கரூர், தென்காசி, திருப்பூர், தஞ்சாவூர் உள்ளிட்ட தங்களுக்கு சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சா.மு.நாசர்,

“தமிழ்நாடு முதல்வர் தாய் உள்ளத்தோடு, காஷ்மீரில் நடந்து வரும் பதட்டமான காலகட்டத்திலும் கண்ணின் இமை போல இரவு பகல் பாராமல் அரசு இயந்திரங்களை முடக்கி விட்டு மாணவர்களை தமிழ்நாடு இல்லத்திற்கு அழைத்து வந்து தற்பொழுது தாயகம் அழைத்து வந்த உள்ளார். அதில் 226 மாணவ மாணவிகள் பத்திரமாக தமிழ்நாடு அழைத்து வரப்பட்டுள்ளனர்” என்றார்.

இந்த நிகழ்ச்சியின் போது அயலக தமிழர் நலத் துறை ஆணையர் வள்ளலார். அயலக தமிழர் நலத் துறை வாரிய உறுப்பினர் ராம் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் “தளபதி” இரத்ததான இயக்கம் சார்பில்

# கோவை அரசு மருத்துவமனைக்கு இரத்த தானம் வழங்கும் முகாம்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிக்கை!



கோவை, மே 16 -

கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் “தளபதி” இரத்ததான இயக்கம் சார்பில் கோவை அரசு மருத்துவமனைக்கு “இரத்த தானம் வழங்கும் முகாம்” நடைபெற உள்ளது என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :

திராவிட சூரியன், திராவிட மாடல் நாயகன், தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், கழகத் தலைவர், இந்தியாவின் நம்பர் 1 தமிழ் நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு, கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் “தளபதி” இரத்ததான இயக்கம் சார்பில் கோவை அரசு மருத்துவமனைக்கு “இரத்த தானம் வழங்கும் முகாம்” 17.05.2025, சனிக்கிழமை அன்று காலை 8.00 மணி முதல், மதியம் 1.00 மணி வரை, வரதராஜபுரம் சாய் விவாகா மகாலில் நடைபெற உள்ளது. இம்முகாமில் முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பங்கேற்று வாழ்த்துரை வழங்குகிறார்.

இம்முகாமில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி பி.ராஜ்குமார், கோயமுத்தூர் மாநகராட்சி மேயர் கே.ரங்கநாயகி ராமசந்திரன் உள்பட மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி மண்டலத் தலைவர்கள், நிலைக்குழுத் தலைவர்கள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், வட்டச் செயலாளர்கள், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள் கழகத் தொண்டர்கள், BLA2 பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### முத்துப்பேட்டை ந. தர்மலிங்கம்
### மே 16 (1993)



திருத்துறைப்பூண்டி வட்டக் கழகச் செயலாளர், தஞ்சை மாவட்ட அவைதலைவர் உள்ளிட்ட பொறுப்புகளில் கழகப் பணியாற்றியவர்.

திருத்துறைப்பூண்டி தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“திருச்சிக்கு அன்பில் தர்மலிங்கமும், தஞ்சைக்கு பண்பில் தர்மலிங்கமும்” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.